பக்கங்கள் - எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 25 புதன்கிழமை (11.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:316

# குறிப்பிட்ட திகதிகளில் பேச்சு நடப்பது அரசின் கையிலேயே!

## புலிகள் தரப்பில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

## நோர்வேத் தூதரைச் சந்தித்த பின்னர் தகவல்

கிளிநொச்சி, ஒக்ரோபர் 11

"இலங்கை அரசுடன் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் அமைதிப் பேச்சு நடக்குமா அல்லது இல்லையா என்பது புலிகளின் கைகளில் இல்லை. அது இலங்கை அரசினதும், சர்வதேச சமூகத்தினதும் கைகளில்தான் உள்ளது. பேச்சுக்கான சூழலைக் குழப்பும் வகையில் அரசு செயற்படுமானால் பேச்சுத் தொடர்பான எமது நிலைப்பாட்டிலும் மாற்றம் வரும்."

- இவ்வாறு தெளிவுபடுத்தியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

நேற்று கிளிநொச்சியில், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரைச் சந்தித்துப் பேசிய பின்னர், செய்தியாளர்களிடம் தகவல் வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 11.30 மணி முதல் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறைச் செயலகத்தில் மேற்படி சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் புலிகள் தரப்பில் தமிழ்ச்செல்வனுடன், புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச்செயல (8ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணத்துக்கு புதிய நடைமுறை இம்மாதம் 15ஆம் திகதி முதல் அமுலுக்கு!

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்ப்பாணத்திலிருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்கு பயணம் செய்வது தொடர்பில் புதிய நடைமுறை அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளது.

இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளதாக யாழ்.சிவில் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய நடைமுறையின் பிரகாரம் -

கப்பல் மூலம் தென்னிலங்கைக்கு பயணிக்க (8ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் மூலம் பயணம் செய்ய அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.11

கப்பல் மூலம் திருகோணமலைக்கு பயணம் செய்வதற்கென யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலயத்துக்கு சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்தவர்களில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் பயணிகள் தெரிவுசெய்யப் (8ஆம் பக்கம் பார்க்க)

## தம்பிலுவிலில் 13 சிறுவர்கள் கடத்தல்

### கருணா குழு கைவரிசை?

அம்பாறை, ஒக். 11

அம்பாறை தம்பிலுவில் பகுதியிலுள்ள விளையாட்டரங்கு ஒன்றில் விளையாடிக் கொண்டிருந்த 13 சிறுவர்கள் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. கடத்தப்பட்ட அனைவரும் 13 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தால் தம்பிலுவில் பகுதியில் (8ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸில் 28 – 29 இல் பேசுவதற்கு புலிகள் இணக்கம் ஆனால் கள நிலைகுறித்து அவர்கள் பெரும் கவலை

### நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவிப்பு

லண்டன், ஒக்.11

குறிப்பிட்ட தினங்களில் (ஒக்டோபர் 28-29) சுவிற்ஸர்லாந்தில் பேச்சு நடத்துவதற்குப் புலிகள் இணங்கியுள்ளனர். ஆனால் கள நிலைமைகள் குறித்தும் அவர்கள் பெரும் கவலை வெளியிட்டிருக்கிறார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் நோர்வேயின் கொழும்பு தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர்.

நேற்று கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நடத்திய பேச்சுத் தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பி.பி.ஸிக்கு அவர் அளித்த செவ்வியில் கூறியதாவது:-

இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவதற்கான இணக்கத்தை விடுதலைப் புலிகள் மீண்டும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மாதம் - அதாவது ஒக்டோபர் - 28, 29ஆம் திகதிகளில் சுவிற்ஸர்லாந்தில் பேச்சு நடத்துவதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், கள நிலைமைகள் குறித்தும் அவர்கள் பெரும் கவலை வெளியிட்டிருக்கின்றார்கள்.

களத்தில் இராணுவ நிலைமைகளில் மாற்றம் ஏற்படுமானால் தங்களின் (8ஆம் பக்கம் பார்க்க)



## வவுனியாவில் குண்டு வெடிப்பு சிவிலியன்கள் மூவர் உயிரிழப்பு



வவுனியா, ஒக்.11

வவுனியா, பூந்தோட்டம் - பெரியார் குளம் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் மூன்று சிவிலியன்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் மூவர் காயமடைந்தனர்.

கடந்த 15 நாள்களுக்கு முன்னர் 'டொல்பின்' ரக வாகனம் ஒன்றை வவுனியா பொலிஸார் தடுத்து வைத்திருந்தனர். அந்த வாகனம் நேற்று முற்பகல் விடுவிக்கப்பட்டது. குறித்த வானின் உரிமையாளரான ஆனந்தன் என்பவர் பொலிஸ் நிலையத்திலிருந்து வானை எடுத்துக்கொண்டு பூந்தோட்டம் - பெரியார்குளம் பகுதியிலுள்ள தமது உறவினரான கருப்பையா பாலசாமி என்பவரது வீட்டுக்குச் சென்றுள்ளார். (8ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை இறால்குளம் பகுதி நோக்கி இரு நாள்களாக படையினர் ஷெல்வீச்சு

மூதூருக்கு வடக்கே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பிரதேசங்களை நோக்கி கடந்த இரு தினங்களாகப் படையினர் கடுமையாக ஆட்லறி எறிகணை மற்றும் பல்குழல் ரொக்கட் தாக்குதல்களை நடத்திவருகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூதூர், இறால்குழி, மணிராசன்குளம் பகுதிகளை நோக்கியே படையினர் இந்தத் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் கடற்புலிகள் புதிய பதுங்குகுழிகளை அமைத்து வருகின்றனர் எனவும், இவற்றை அழிக்காவிடின் திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்புக்கு அது பெரும் அச்சுறுத்தலாயிருக்குமெனவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

மூதூர் கிழக்கில் சம்பூர் உட்பட முக்கிய பல பகுதிகளை இழந்த புலிகள் தற்போது உப்பாறு, இறால்குழி மற்றும் மணிராசன் குளத்தில் கடற்புலிகளின் நிலைகளை அமைத்துள்ளமை திருமலைத் துறைமுகத்தின் பாதுகாப்புக்கு நேரடி அச்சுறுத்தலாயுள்ளதாகவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் வசமுள்ள இந்தப் பிரதேசங்களை நோக்கிக் கடந்த இரு நாட்களாக திருகோணமலை கடற்படைத்தளம் இராணுவ முகாம்களிலிருந்தும், கல்லாறு இராணுவ முகாமிலிருந்தும் ஆட்லறி ஷெல்களும், பல்குழல் ரொக்கட்டுகளும் தொடர்ச்சி (8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. சித்தாண்டியில் படையினரின் சூட்டில் இருவர் உயரிழப்பு

மட்டக்களப்பு, ஒக்.11

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டி வீதியில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

சித்தாண்டி இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்துவதற்காக உழவு இயந்திரம் (8ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த - ரணில் சந்திப்பின் பின்பே இணக்கம் குறித்து இறுதியான முடிவு

### ஐ.தே.கட்சி எம்.பி. அத்தநாயக்கா தகவல்

கொழும்பு, ஒக். 11

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக இரு பிரதான கட்சிகளும் தற்போது ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளபோதிலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்பே அவ்விணக்கப்பாடு நடைமுறைப்படுத்தப்படும் என்றும், (8ஆம் புக்கம் பார்க்க)

## சிறப்புத் தளபதி அக்பர் வீரச்சாவு!

கிளிநொச்சி, ஒக்.11

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த போராளிகளில் ஒருவரும், அந்த அமைப்பின் படைப்பிரிவுகளில் ஒன்றான லெப். கேணல் விக்ரர்கவச எதிர்ப்புப் பிரிவின் சிறப்புத் தளபதியுமான அக்பர் வட போர்முனையில் வீரச்சாவடைந்திருக்கிறார் என்று புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### திங்களன்று கைதான நகைக்கடை உரிமையாளர் உட்பட

# வவுனியா நள்ளிரவுக் கொள்ளையர்களின் சந்தேக நபர்கள் 8 பேர் விளக்கமறியல்

## தேடப்படுவோர் வெளிநாடு செல்லாது தடுக்கவும் உத்தரவு

வவுனியா, ஒக்.11

வவுனியாவில் நள்ளிரவு வேளைகளில் குழுவாக ஆயுதமேந்தி வந்து அதிரடியாக வீடுகளில் பலாத்காரமாக புகுந்து கொள்ளையடித்த சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நகைக்கடை உரிமையாளர் ஒருவர் உட்பட 7 பேர் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தினால் கடந்த 3 வாரங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மேலும் ஒரு நகைக்கடை உரிமையாளரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

வவுனியா குருமண்காடு, பூந்தோட்டம், மாறம்பைக்குளம் போன்ற பகுதிகளில் இடம் பெற்றுள்ள இந்தக் கொள்ளைகளுடன் தொடர்புடைய கொள்ளைக்கூட்டத்தின் தலைவன் எனக் கருதப்படும் ஒருவர் உட்பட மேலும் 8 பேர் நீதிமன்ற உத்தரவின் பேரில் தேடப்பட்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட நகைக்கடை உரிமையாளர்கள் மீதான விசாரணையின்போது கொள்ளையடிக்கப்பட்டதாகக் கருதப்படும் தங்க நகைகளை விலைக்கு வாங்கிய இந்த நகைக்கடை உரிமையாளர்கள் அவற்றை உருக்கி புதிய நகைகளை செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளைக் கொள்வனவு செய்தமைக்கான பற்றுச்சீட்டுக்களும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இந்தப் பற்றுச்சீட்டுக்களில் உண்மையான பெயர் விலாசங்களும், போலியான பெயர் விலாசங்களும் காணப்பட்டதுடன் சில பற்றுச்சீட்டுக்களில் பெயர் விவரங்கள் எதுவுமே காணப்படாதிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் யார் யாரிடம் இருந்து நகைகள் வாங்கப்பட்டன என்பது தொடர்பான விவரங்களைத் தங்களால் கூற முடியாதிருப்பதாக இந்த நகைக்கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திங்களன்று கைது செய்யப்பட்ட நகைக்கடை உரிமையாளர்கள் 58 லட்சம் ரூபா பெறுமதியான 3500 பவுண் தங்க நகைகளை கொள்வனவு செய்துள்ளதாகவும், அதற்கான பற்றுச்சீட்டுகள் பெரும்பாலானவற்றில் பெயர் விலாசங்கள் இருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு விலைக்கு வாங்கப்பட்ட நகைகள் உருக்கப்பட்டு புதிய நகைகள் செய்யப்பட்டதாகவும் நகைகள் யார் யாரிடம் இருந்து வாங்கப்பட்டன என்ற விவரத்தை தெரிவிக்க முடிய வில்லை என்றும் விசாரணையின் போது சந்தேக நபராகிய இந்த நகைக்கடை உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

வவுனியா குருமண்காடு, பூந்தோட்டம், மாறம்பைக்குளம் ஆகிய 3 இடங்களிலும் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்ற திகதிகளுக்கு முன்னராக இரண்டு வார காலப்பகுதியிலும், கொள்ளைச் சம்பவ திகதிக்கு பின்னரான இரண்டு வார காலப்பகுதியிலும் இந்த நகைக்கடை உரிமையாளர்கள் தமது கடைக்கு கொள்வனவு செய்த தங்கம் மற்றும் தங்க நகைகள் தொடர்பான முழுமையாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு வவுனியா மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

**லண்டனில் இருந்து வந்தவர் விடுதலை**

கைது செய்யப்பட்ட நகைக்கடை உரிமையாளர் ஒருவரிடம் ஓடருக்கு நகைகள் செய்தமைக்காக கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் லண்டனிலிருந்து திருமணத் தேவைக்காக வந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையை அடுத்து நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளைச் சம்பவங்களை தொடர்ந்து பூந்தோட்டம் பகுதியில் செயற்பட்டு வந்த விழிப்புக் குழுவினர் குறிப்பிட்ட இடம் ஒன்றில் வீதித்தடை போட முயன்ற போது அதனை எதிர்த்து வாக்குவாதப்பட்டு விழிப்புக்குழு உறுப்பினர் ஒருவரைத் தாக்கியவர் மீதும் பொலிஸாரின் கவனம் திருப்பட்டு அவருக்கும் கொள்ளையர்களுக்கும் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொள்ளைக்கூட்டத்தின் தலைவர் என சந்தேகிக்கப்பட்டு தேடப்பட்டு வருபவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளில் கறுத்த ஹெல்மட் அணிந்து பொலிஸாரை வேவு பார்த்துவிட்டு தப்பியோட முயன்றபோது பூந்தோட்ட பகுதியில் பொலிஸாரினால் துரத்திப்பிடிக்கப்பட்ட ஒருவரும் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

கொள்ளைச் சம்பவங்களையடுத்து பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்தக் கொள்ளைகள் தொடர்பாக விசேட பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணை நடத்தி வருவதாகவும், கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் வீடுகள் நீதிமன்றத்தின் தேடுதல் பிடியாணையின் பேரில் பொலிஸாரினால் சோதனையிடப்பட்டுள்ளதுடன், தேடப்பட்டு வருகின்ற 8 பேரினுடைய வீடுகளை சோதனையிடுவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா பிரதி மாகாண பொலிஸ் அத்தியட்சகர் வவுனியா நீதிமன்றத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

**வங்கிக் கணக்குகளை சோதனையிட அனுமதி**

வவுனியாவில் உள்ள முக்கிய வங்கிக் கிளைகள் அனைத்திலும் கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகள் தொடர்பாக நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். வங்கிகளில் இது தொடர்பில் பொலிஸார் சோதனையிடுவதற்கு அனுமதி வழங் கியுள்ள வவுனியா வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன், கொள்ளைச் சம்பவங்கள் தொடர் பான சந்தேகநபர்களின் வங்கிக் கணக்குகள் பற்றிய விவர அறிக்கையை நீதிமன்றத் திற்கு சமர்ப்பிக்குமாறும், சந்தேக நபர்களி னால் அடைவு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை நீதிமன்றத்தின் உத்தரவின்றி திருப்பிக் கொடுக்கக் கூடாது என்றும் வங்கிக் கிளை முகாமையாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைக்காகத் தேடப்பட்டு வருகின்ற கொள்ளைக் கூட்டத்தின் தலைவர் உட்பட சந்தேக நபர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல முடியாதவாறு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, வவுனியா கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக இடம்பெற்று வருகின்ற நீதிமன்ற விசாரணைகளில் தலையீடு செய்யும் வகையில், இணையத்தளம் ஒன்றில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் இலங்கைச் சட்டத்தின் படி அது நீதிமன்றத்தை அவமதித்த குற்றச் செயலாகும் என தெரிவித்தார்.

**சட்டத்தின் முன்நிறுத்த நீதிமன்றம் தயங்காது**

உண்மையான செய்திகளை இணையத்தளங்களில் வெளியிடுவது தவறாகாது. குற்றச் செயலுமாகாது. பொய்யானதும், பிழையானதுமான தகவல்களை, நீதிமன்ற விசாரணைகளை வேண்டுமென்றே களங்கப் படுத்தும் நோக்கத்துடன் வெளியிடுபவர்களைத் தேவையேற்படின் சட்டத்தின் முன் நிறுத் துவதற்கு நீதிமன்றம் தயங்கமாட்டாது என்றும் -

வவுனியா கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளில் பொலிஸார் பணம் பெறுவதாக பொலிஸ் துறைக்கு களங்கள் ஏற்படுத்தும் வகையில் அந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் நீதிபதி இளஞ்செழியன் குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்ட நீதிமன்றம் புனிதமான நீதிச் சேவையை சரியான முறையில் ஆற்றி வருகின்றது. நீதிச் சேவையை இந்த நீதிமன்றம் ஒருபோதும் களங்கப்படுத்த மாட்டாது.

அதேவேளை அதனை எவரும் களங்கப்படுத்துவதையும் அது ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை நீதிமன்றம் கடுமையாகச் செயற்பட்டு தடுத்து நிறுத்தத் தயங்கமாட்டாது என்றும் நீதிபதி எம்.இளஞ்செழியன் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணையின்போது கடுமையான தொனியில் குறிப்பிட்டார். (அ-164)

# தமிழீழபெண்கள் எழுச்சி நாளும் மாலதியின் நினைவு தினமும் அனுஷ்டிப்பு

கிளிநொச்சி,ஒக்.11

2ஆம் லெப் மாலதியின் 19ஆவது ஆண்டு நினைவு நிகழ்வும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும் தமிழர் தாயகப் பகுதிகளில் நேற்று உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன. நேற்றுக் காலை 9 மணிக்கு பொதுச் சுடரேற்றல், தமிழீழ தேசியக் கொடியேற்றல் என்பவற்றுடன் மாலதியின் 19ஆவது நினைவு நிகழ்வுகள் பிரதேச ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட இடங்களில் ஆரம்பமாகின.



கிளிநொச்சியில் பிரதேச செயலக வளாகத்திலும், அரசியல்துறை நடுவகப் பணியகத்திலும் மாலதியின் திருவுருவச் சிலை அமைந்துள்ள இரணை மடு சந்தியிலும் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. நேற்று பிற்பகல் 5.45 மணிக்கு தமிழீழ காவல் துறை நடுவகப் பணியகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை போராளி தாமரை ஏற்றி வைத்தார். திருவுருவப் படத்திற்கான ஈகைச் சுடரினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றி வைத்து மலர் மாலை அணிவித்தார்.

புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபம், முல்லைத்தீவு, விசுவமடு, மல்லாவி, கனகராயன் குளம், வவுனியா வடக்கு மன்னார் ஆண்டான் குளம், முழங்காவில் ஆகிய பிரதேசங்களில் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. (68)

# படுகொலை செய்யப்பட்டோர் விவரம் நேற்றும் பதிவு

யாழ்ப்பாணம், ஒக்.11

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று நான்காவது நாளாகவும் படுகொலை தொடர்பான விவரங்கள் பதிவு செய்யப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த இரண்டு மாதங்களில் படுகொலை செய்யப்பட்டவர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டன.

நேற்றைய தினம் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்டவர்களின் கொலைகள் சம்மந்தமான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இன்றைய தினம் தீவகத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பதிவுகள் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (68)

## கண்ணீர் அஞ்சலி

எமது கொத்தணியின் செயலாளரான

**கந்தசாமி விஜயகரன்**



அவர்கள் அகாலமரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மானிப்பாய்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், வலிகாமம் ப.தெ.வ. அ.கூ.ச. கொத்தணி.

## கண்ணீர் அஞ்சலி

*எமது சங்கத்தின் செயலாளரான*

**கந்தசாமி விஜயகரன்**



அவர்கள் நேற்று 10.10.2006 செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்துள்ளார். இவரின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சங்கானை பனை தென்னை வள, அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பிரதான வீதி, சங்கானை.*

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

**A/L 2007, 08 & DAY**

B.st : Mr. பசில்
Acc : Mr. தவா
Eco : Mr. கஜிதன்

Tamil : Mr.சிவா
Log: Mr.R. ரமணன்
Chris: Mrs. A. மல்லிகா
Drama / Hindu / C: மயூரன்
Eng: Mr.K. ரமணன்
Geo: ஆசிரியர்

C/ma: Mr.E. ஜெயக்குமார்
Phy: Mr. வர்ணன்
Che: Mr. ஜெயந்தன்

**SHAMROCK**
கச்சேரியடை, யாழ்.

## விற்பனை

திண்டுக்கல் இரும்புப் பெட்டி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
249 (105), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

***தம்பிப்பிள்ளை பஞ்சாட்சரம்***



கொட்டடி, சிவன்பண்ணை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை பஞ்சாட்சரம் 09.10.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரது பூதவுடல் கொக்குவில் கிழக்கு இந்து மயானத்தில் இன்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

M. செல்வராஜா,
மணியகாரன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(கனகநாயகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்கு இந்தியாவுக்கு வாய்ப்பு

**சுனில் கவாஸ்கர் தெரிவிப்பு**

புதுடில்லி, ஒக்.11

மினி உலகக் கிண்ணத் தொடரை சொந்த மண்ணில் எதிர்கொள்வதால் இந்திய அணிக்கு கிண்ணம் வெல்லும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக அவ்வணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார்.

மினி உலகக் கிண்ணத் தொடரின் முக்கியத்துவம் குறித்தும் இந்திய அணியின் வெற்றி வாய்ப்புக் குறித்தும் சுனில் கவாஸ்கர் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளித்தரா். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

''இம்முறை உலகக் கிண்ணத் தொடரிற்கு ஆறு மாதங்களுக்கு முன்பாக மினி உலகக் கிண்ணத் தொடர் நடப்பதால், அணிகள் தங்களின் பலத்தைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பைப் பெற்றுள்ளன. இரண்டுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் என்னவென்றால், உலகக்கிண்ணத்தில் ஓர் அணி ஓர் ஆட்டத்தில் தோல்வி அடைந்தால், அடுத்தடுத்த ஆட்டங்களில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டுவிடலாம். ஆனால், மினி உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் அணிகள் அனைத்து ஆட்டங்களிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

''இந்த ஆண்டு மினி உலகக் கிண்ணத் தொடரில், அணிகளின் தேர்வு ரசிக்கும்படியாக உள்ளது. ஐ.சி.சி. தரவரிசைப் பட்டியலில் முதல் ஆறு இடங்களில் உள்ள அணிகள் நேரடியாக லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன. அடுத்த நான்கு இடங்களில் உள்ள அணிகளுள் வெற்றி பெறும் 2 அணி லீக் சுற்றுக்கு தகுதிபெறும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

''உலகச் சம்பியனான ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரை இதுவரை மினி உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்துக்குக் கூட முன்னேறியதில்லை. இந்த முறை கிண்ணத்தைக் கைப்பற்றக் கடுமையாகப் போராடும் என எதிர்பார்க்கலாம். இருப்பினும் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் ஆஷஸ் தொடரை கைப்பற்றுவதில்தான் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. சொந்த மண்ணில் விளையாடுவதால் இந்தியாவுக்கு கிண்ணத்தை வெல்ல கூடுதல் வாய்ப்பு உண்டு. மினி உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்துக்கு முன்னேறும் எந்த ஓர் அணியாக இருப்பினும், அது ஆஸ்திரேலியாவுக்கு எதிராகவே மோத வேண்டிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளது'' - என்று கூறினார். (ர)

# இன்றைய மோதல்

மொகாலி, ஒக்.11

மினி உலகக் கிண்ணத் தொடரில் இன்றைய ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி பங்களாதேஷை எதிர்த்தாடவுள்ளது. முன்னதாக நடைபெற்ற ஆட்டங்களில் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு வெற்றியுடன் இரண்டு புள்ளிகளைப் பெற்றுள்ளது. பங்களாதேஷ் அணி இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியைப் பெற்று புள்ளிகள் எதுவும் பெறாதநிலையில் உள்ளது. (ர)

# சானியா தோல்வி



புதுடில்லி, ஒக்.11

தாய்லாந்தில் இடம்பெற்று வரும் பி.ரி.ரி. பாங்கொக் பகிரங்க டெனிஸ் தொடரின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்ஷா தோல்வியடைந்து தொடரை விட்டு வெளியேறினார்.

நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்க வீராங்கனையான மெகனன் செளவ்நெசி என்பவரை சானியா எதிர்த்தாடினார். இவ்வாட்டத்தில் சானியா 4:6, 4:6 என்ற நேர் செற்கணக்கில் படுதோல்வியுற்றார். (ர)

## விளையாட்டு

# பயிற்சியாட்டத்தில் சிமித் பிரகாசிப்பு

புது டில்லி, ஒக்.11

மினி உலகக்கிண்ணத் தொடரில் பங்குபற்றுவதற்காக இந்தியா வந்துள்ள தென்னாபிரிக்க அணி, புதுடில்லியின் உள்ளூர் அணியொன்றுடன் பயிற்சியாட்டத்தில் மோதியது. இவ்வாட்டத்தில் காயத்திலிருந்து மீண்டுவந்துள்ள தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரேம் சிமித் 73 ஓட்டங்களை விளாசி தனது மீள் வருகைக்கு நம்பிக்கையளித்தார்.

இரண்டு மாதங்களாகக் காயத்தின் காரணமாக விளையாடாத சிமித் அதன் பின்னர் பங்குபெறும் முதலாவது ஆட்டம் இதுவாகும்.

இப்பயிற்சியாட்டத்தில் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 307ஓட்டங்களைக் குவித்தது. டீவில்லியர்ஸ் 55 ஓட்டங்களையும் ஷோன் பொலக் 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பின்னர் துடுப்பெடுத்தாடிய உள்ளூர் அணி 198 ஓட்டங்களிற்கு சகல விக்கெட்டுகளை இழந்து தோல்வியடைந்தது.

# வீரர்களை மாற்றிக் களமிறக்கும் சோதனை முயற்சி தொடரும்



புதுடில்லி, ஒக்.11

வீரர்களை மாற்றிக் களமிறக்கும் சோதனை முயற்சி மினி உலகக் கிண்ணத் தொடரிலும் தொடரும் என்று இந்திய அணித் தலைவர் டிராவிட் உறுதிபடக் கூறியுள்ளார்.

மினி உலகக் கிண்ணத் தொடரில் விளையாடும் இந்திய அணி வீரர்கள் டில்லியில், கடந்த மூன்று தினங்களாகத் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். பயிற்சியில் ஈடுபட்ட பின்னர் நிருபர்களிடம் அணித் தலைவர் டிராவிட் கூறியதாவது:-

''அடுத்த ஆண்டு நடக்க உள்ள உலகக் கிண்ணத் தொடரை மனதில் கொண்டே அணியில் மாற்றங்களைச் செய்து வருகிறோம். அதனால், வீரர்களை மாற்றிக் களமிறக்கும் சோதனை முயற்சி மினி உலகக் கிண்ணத் தொடரில் தொடரும். கடந்த ஆண்டு இலங்கை, இங்கிலாந்து, பாகிஸ்தானுக்கு எதிராக வெற்றிபெற்றபோது நாங்கள் செய்த சோதனை முயற்சிக்குப் பாராட்டுத் தெரிவித்தவர்கள் மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் மலேசியா முத் தரப்புத் தொடர்களில் தோற்றவுடன் கடுமையாக எதிர்ப்பது புரியாத புதிராக இருக்கின்றது.

''சோதனை முயற்சி தொடர்பாக பத்திரிகைகள் தவறான கருத்தைப் பரப்பி வருகின்றன. தொடக்க வீரர்களாக ஹர்பஜன்சிங், முனாப் பட்டேல் இருவரையும் களம் இறக்கினால்தான் பெரிய தவறு. மாறாக, ஆட்டத்திற்கேற்ப வீரர்களை மாற்றிக் களமிறக்குவதில் எவ்வித தவறும் கிடையாது. இதைப் புரிந்துகொள்ளாதவர்கள்தான் விமர்சிக்கின்றனர். கடந்த ஆண்டு இந்தியா பெற்ற இமாலய வெற்றிகளுக்கு சேவாக், டோனி, பதான் மூவரின் சிறப்பான ஆட்டமே காரணம். சேவாக், டோனி இருவருமே ஆட்டத்தைத் தலைகீழாக மாற்றக் கூடியவர்கள். இவர்கள் சிறப்பாக விளையாடினால் அணியின் வெற்றியை யாராலும் தடுக்கமுடியாது.'' - என்று கூறினார்.

# ஐ.சி.சி. விருதுவிழா பிற்போடப்பட்டது

டுபாய், ஒக்.11

சர்வதேச கிரிக்கெட் சபையின் இந்த ஆண்டிற்கான விருது வழங்கும் விழா எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. இவ்விழாவை இம்மாதம் 23ஆம் திகதி நடத்துவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், இந்த வருடத்திற்கான விருது வழங்கும் விழா இந்தியாவில் நடைபெறுகின்றது. தீபாவளி பண்டிகை ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதிக்கு நெருக்கமாகக் கொண்டாடப்படவுள்ளதாலேயே ஐ.சி.சியின் விருது வழங்கும் விழா பிற்போடப்பட்டுள்ளது.(ர)


G.A.Q

**பேராதனை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

* A/L இல் கலை வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் மூன்று பாடம் சித்தி அடைதவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் ஆகும்.
* இப்பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக செய்து கொடுக்கப்படும்.
* புதிய பிரிவு விரிவுரைகள் ஆரம்பம் : 14.10.2006.

குறிப்பு - சகல பிரிவுகளுக்கும் உரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. காலை 8மணி.

*விவரங்களுக்கு :* புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

நிர்வாகி
S.அருள்நங்கை.

(54268)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர்
திருமதி யசோதரா தியாகராஜா
அவர்களின் அன்புக் கணவர்

**தியாகராஜா**

(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்**
**கல்விசாரா ஊழியர்கள்**
**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,**
மானிப்பாய்.

(54260)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*தாயின் மடியில்* 23 - 11 - 1952



*இறைவன் அடியில்* 11 - 10 - 2005

அமரர்

**மாட்டீன் சின்னத்தம்பி**

அன்பு காட்டிய அப்பாவே!
குடும்பத்தை வழிநடத்திய தலைவனே!
எமை வாழ வைத்த அன்புத் தெய்வமே!
தினமும் நீங்கள் பேசிச்சிரித்த
நினைவுகளுடன் இருளில் நாமடைந்த
சோகத்தில் ஓராண்டு கடந்ததப்பா
உமது சிரித்த முகத்தை எங்கு தேடுவதப்பா.

*உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

70/20 மத்தியூஸ் விதி,
யாழ்ப்பாணம்.

மனைவி
பிள்ளைகள், மருமகன்.

(54231)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி

**கோபாலபிள்ளை பரமேஸ்வரி**

*மண்ணில்* 18-06-1937 *விண்ணில்* 28-08-2006



அன்பின் திருவுருவே! பாசத்தின் உறைவிடமே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா உன் அன்புக்கு ஈடாகுமா?
அம்மா உங்களைக் காண ஒருமுறையேனும்
இப்பூவுலகில் வந்து பிறக்கமாட்டீர்களா?

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.10.2006) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உங்கள் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*

**கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இல.15, சங்கிலியன் வீதி, நல்லூர்.
T.P. - 021 4590913

**கீர்த்தனா களஞ்சியம்,**
29, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி.

(54249)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

*மண்ணில்* 11 - 09 - 1934



*விண்ணில்* 29 - 09 - 1999

அமரர் **வேலாயுதர் கந்தையா**

(இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகர்)

திதி 11.10.2006

''பிறக்கும் போதே இறப்பும் நிச்சயம்''
இவற்றை நன்கு உணர்ந்தாலும்
பிரிவுத்துயர் என்பது தாங்க முடியவில்லை
ஏழாண்டுகள் கடந்து போனாலும்
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
உங்கள் நினைவுகள் அகலாதே.

பிள்ளையார் விதி முகப்பு,
அளவெட்டி.

அன்பிற்குரிய மனைவி
கந்தையா விக்னேஸ்வரி

(54271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை

55,000 அமெரிக்க லொத்தர் விசா இலவச விண்ணப்ப விவரங்களுக்கு,

**Penguin Book Shop**
B2-F23, Bloemendhal Flats, Colombo - 13.
T.P: 0716806843, 2438367



## பாலன் மில்ஸ்

தேங்காய்எண்ணெய், இலுப்பெண்ணெய், நல்லெண்ணெய்(எள்) போன்ற (3கிலோவிலிருந்து ஆயிரம் கிலோ வரை) எண்ணெய் வகைகளை நவீன இயந்திரத்தில் வடித்துக்கொள்ள உடன் நாடவேண்டிய இடம்.

"பாலன் மில்ஸ்"
மாவடிச்சந்தி - வட்டுக்கோட்டை.
கஜலக்சுமி அரிசி ஆலை,
வட்டுக்கோட்டை.
T.P:0602212624
(54191)


# தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை சூடு!

## பாலைதீவில் சம்பவம்; ஒருவர் படுகாயம்

இராமேஸ்வரம்,ஒக்.1(

இராமேஸ்வரத்துக்கு அருகேயுள்ள கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

கடந்த திங்கட்கிழமை நண்பகல் வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது, பேரஸ் (வயது-23) என்ற தமிழக மீனவரே கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

அவர் இராமநாதபுரம் அரச வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க)


## மணமகன் தேவை

1971இல் பிறந்த உயர்கல்விகற்று இலங்கையில் தொழில்புரியும் விவாகரத்துப் பெற்ற பிள்ளைகளில்லாத 5' 7" உயர இந்துப் பெண்ணுக்கு உள்நாட்டு/வெளிநாட்டு மணமகன் தேவை. தொடர்புகளுக்கு: தொ.பே : 081 4923982



## HONDA

ஜெனரேட்டர்கள்



வகைகள்
EBK 650
EBK 2000
EBK 2800

ஜெனரல் இக்விப்மன்ட்ஸ் லிமிட்
400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 12.
தொலைபேசி, 2345046, 2827284, 2842833,2430799,
பக்ஸ்: 2434687.


# வலயக் கல்வி அலுவலகம், தீவகம்

# கேள்வி அறிவித்தல் - 2006

1) இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் கல்வி அமைச்சின் LEAD , PSDG, SEMP நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ் குறிப்பிட்ட கட்டட வேலையைப் பூர்த்தி செய்ய வலயக் கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.

2) ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும் இலங்கை தேசிய கட்டட ஒப்பந்தகரரர் சங்கத்தின் அங்கத்தவராகவும், பதிவுப் புத்தகம் 2006ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும்.

3) கேள்விப்பத்திரங்கள் வழங்கல் 2006.10.11 ஆம் திகதியிலிருந்து 2006.10.18ஆம் திகதி பி.ப. 1.30 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 26.10.2006 ஆம் திகதி மு.ப. 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப. 11.00 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.

4) கேள்விப்பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்கமுடியாத வைப்புப் பணங்களை தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திர படிவங்களை தீவக வலய பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும். மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளமுடியும். பாடசாலை அபிவிருத்திச் சங்கம்(8, 10, 13ஆம் பாடசாலை வேலைகள்) கட்டணமேதுமின்றி கேள்விப்பத்திரங்களை பெற்று பாடசாலையின் கேள்வியில் பங்கெடுக்கமுடியும்.

| நிறுவனத்தின் பெயரும் வேலையின் விவரமும் | மீளளிக்கமுடியாத வைப்புப் பணம் | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|
| 01) யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வி. கணனிப் பயிற்சி நிலையம் | 250/= | 2,100/= | M.9 |
| 02) யா/நெடுந்தீவு ம.வித்தி பாடசாலை கட்டட திருத்த வேலை | 750/= | 24,400/= | M.7 |
| 03) யா/வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம.வி. பாடசாலை கட்டட திருத்த வேலை | 750/= | 23,700/= | M.7 |
| 04) யா/கரம்பொன் சிறிய புஷ்ப ம.வி. செயற்பாட்டு அறை அமைப்பு | 500/= | 8,650/= | M.9 |
| 05) யா/புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வி. விஞ்ஞான கூட அமைப்பு (சா/த) | 500/= | 19,650/= | M.8 |
| 06) யா/புனித அந்தோனியார் கல்லூரி மதில் அமைப்பு | 500/= | 9,700/= | M.9 |
| 07) யா/வேலணை சரஸ்வதி வித்தி. 90'-0x25'-0 மேல் மாடி அமைப்பு மிகுதி வேலை | 750/= | 38,000/= | M.7 |
| 08) யா/வேலணை சரஸ்வதி வித்தி. மதில் அமைப்பு | 250/= | 1,850/= | M.9 |
| 09) யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி. 90'-0x25'-0 மேல்மாடி அமைப்பு (கீழ்தளம்) (விஞ்ஞான கூடம் & நூலக அமைப்பு) | 750/= | 38,000/= | M.7 |
| 10) யா/காரை சுந்தரமூர்த்தி வித்தி. மதில் அமைப்பு | 500/= | 5,200/= | M.9 |
| 11) யா/புனித அந்தோனியார் கல்லூரி விஞ்ஞானகூட அமைப்பு (உயர்தர வகுப்பு) | 750/= | 30,500/= | M.7 |
| மீள் கேள்வி அறிவித்தல் | | | |
| 12) யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வி.60'-0x25'-0 புதிய கட்டடம் | 500/= | 15,000/= | M.8 |
| 13) யா/நயினாதீவு ஸ்ரீ கணேசா ம.வி. நூலக அமைப்பு வேலை | 500/= | 4,000/= | M.9 |
| 14) யா/நயினாதீவு ம.வி. கணனி பயிற்சி நிலையம் | 250/= | 2,500/= | M.9 |

5) கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கைப் பத்திரங்களின் ஒன்று மூலப்பிரதியாகவும் மற்றையது பிரதியாகவும் கொள்ளவேண்டும்.

6) கேள்வியாளர் பூர்த்திசெய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும். இரண்டு கடித உறையும் வேறு பெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு *'தலைவர், கேள்விச் சபை, வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தீவகம்'* என விலாசமிட்டு தீவக வலயக் கல்வி அலுவலகத்தில்வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 26.10.2006ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் இடப்படவேண்டும்.

7) குறித்த நேரத்திற்கு பிந்திய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பாடசாலை வேலைகள்
வலயக் கல்வி அலுவலகம்
தீவகம்,வேலணை.

ஆ.ராஜேந்திரன்,
கேள்வி[illegible]
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தீவகம், வேலணை.

(சி/51122)


**IDM**
The Nation's ICT Academy

**Computer Studies Islandwide (pvt)Ltd**
**Affiliated University College**
**216, Navalar Road, Jaffna.**
T.P No :- 021-4591398 web : www.idm.org. www.idm.edu

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில்
அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில்
இன்றே இணையுங்கள்


International Courses
1) NCC - UK (International Diploma in Computer Studies - IDCS)
2) NCC - UK (International Advanced Diploma in Computer Studies - IADCS)
3) HND - UK (Higher National Diploma)
4) MCP, MCSA, MCSE

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Weekend Class - 14/10/2006
Weekday Class - 16/10/2006

Diploma Course
1) BTEC - Dip.in.ICT (BTEC - Dip.ICT)
(ICT, Windows, MS-office, Flash, Dreamviewer, VB, JAVA, HTML, Internet)
2) Dip.in Pc Assembling, Networking & User Technical Support
(Introduction to Computer, Hardware Specification, Assembling & Disassembling, System software, Repairs & Maintenace, Communication Services, Networking & Communication)
3) Dip.in Business Management (DIBM)
(Organizations and Behavior, Marketing, Quantitative Techniques for business, Managing financial Resources, Business and personnel, IT & Communication Skills)

சிறுவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் - 14/10/2006
வாரநாட்கள் 2.00pm - 4.00pm
வாரஇறுதிநாட்கள் 12.00pm - 2.00pm


## "வானத்து நிலவே எங்கள் அதிபரிடம் சென்று கல்லூரித் தாயவளின் வணக்கத்தைச் சொல்லு"



அமரர்

# நடராசா சிவகடாட்சம்

**(B.Sc., Dip. in Edu., S.L.P.S. - I)**

**(முன்னாள் அதிபர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)**

இது கண்ணீர் அஞ்சலி அல்ல
முதலாம் வருட நினைவுப் பூக்களும் அல்ல
விண்ணில் உள்ள தனது மைந்தனுக்கு
மண்ணில் இருந்து கல்லூரி அன்னை
அனுப்பும் வாழ்த்து மடல்
"எங்கள் அதிபர் இறக்கவில்லை"
கல்லூரி மைந்தர்களின் இதயத்தில் என்றும்
வாழ்ந்துகொண்டிருக்கின்றார்
"இதுதான் உண்மை"
கல்லூரி வளாகத்தல் பதித்த அதிபரின் பாதச் சுவடுகள்
எப்பொழுதும் எங்களை ஆசீர்வதிக்கின்றன.

அகவை அறுபதில் எங்கள் அதிபரை
மங்கல வாத்தியங்களுடன் அழைத்து வந்து
மலர் மாலைகளை அதிபரின் கழுத்தில் மாலையாகக் குவித்து
புகழ்மாலை சூட்டி அழகு பார்க்க எண்ணியிருந்தோம்
எளிமையையே என்றும் விரும்பும் எங்கள் அதிபர்
எல்லோரையும் ஏமாற்றிவிட்டு
மலர் வளையங்கள் புடை சூழ மகிழ்ச்சியுடன்
விண்ணுலகம் சென்றுவிட்டார்.

"சிரிப்பு" இது சிந்திக்கத் தெரிந்த
மனிதகுலத்துக்கே சொந்தமான கையிருப்பு
எங்கள் அதிபரும் ஒருநாள் காலைப் பிரார்த்தனையில்
அட்டகாசமாய் சிரித்துக் கொண்டிருந்தார்.
அதிபரின் 54 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்களை
மாணவர்கள் பலத்த கரகோஷம் செய்து தெரிவித்தபோது
தமது 55 ஆவது பிறந்த நாளை மகிழ்ச்சியுடன்
விண்ணுலகில் கொண்டாடுவதை நினைத்துத்தான்
எங்கள் அதிபர் அன்று அட்டகாசமாகச் சிரித்தார் போலும்.

அபரிமிதமான திறமையும் விடாமுயற்சியும் மிக்க
எமது புதிய தலைமைதுவத்துவத்துக்கு
என்றும் நாம் கைகொடுத்து
எங்கள் கல்லூரி அன்னையின் புகழை
வான் உயர ஓங்கச் செய்வோம்.
இதுவே எங்கள் அதிபர் சிவன் கடாட்சத்துக்கு
நாம் செலுத்தும் நன்றிக்கடன் ஆகும்.

நலன் புரிக் கழகம்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப அட்டைகள் இப்போது மீளாய்வு

நவாலி,ஒக்.11

நவாலி கிழக்கு ஜே/135 கிராம சேவையாளர் பிரிவில் குடும்ப அட்டைகள் தற்போது மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றை இதுவரை மீளாய்வு செய்து கொள்ளாதவர்கள் உடன் வந்து மீளாய்வு செய்யுமாறு அப்பிரிவு கிராம சேவையாளர் ரி.நித்தியானந்தன் கேட்டுள்ளார்.

மீளாய்வு செய்யாத குடும்ப அட்டைகளுக்கு இலவசமாகவோ பணத்திற்கோ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியாதென்று தெரியவருகிறது. (ப-100)

## வழமையான கட்டணத்துடனேயே தனியார் சிற்றூர்திச் சேவை

### வடமராட்சி சிற்றூர்திச் சங்கம் தெரிவிப்பு

வடமராட்சி,ஒக்.11

வடமராட்சிப் பிரதேச தனியார் சிற்றூர்திச் சேவைக்கு வழமையான கட்டணமே அறவிடப்படுகின்றன. எனவே, பயணிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து கட்டணங்களைச் செலுத்தலாம்.

இவ்வாறு அறிவுறுத்தியுள்ளனர் வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினர்.

இது தொடர்பாக சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்தகாலங்களில் எரிபொருள் பெறுவதில் பெரும் இடர்பாடுகள் இருந்துவந்த போதிலும், தற்போது வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கத்தைச் சேர்ந்த அனைத்து சிற்றூர்தி (மினிபஸ்)களுக்கும் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இயன்றவரை எரிபொருளைத் தந்து உதவுகிறது. இதனால், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சிறந்த சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது.

இந்நிலையில், பயணிகள் எவரும் அதிக கட்டணம் செலுத்தவேண்டாம். அதிக கட்டணத்தை அறவிடும் மினிபஸ் தொடர்பாக எமக்கு அறியத்தந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேநேரம், எரிபொருள்களைத் தந்து உதவும் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றுள்ளது. (202)

## இருபாலை, செம்மணி விவசாயிகளின் கவலை

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ். குடாநாட்டின் இருபாலை தெற்கு மற்றும் செம்மணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் காலபோக நெற்செய்கையில் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை எனத் அறியவருகிறது.

யாழ். குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் விதை நெல்லுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலும் கடும் வரட்சி மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டால் உழவு இயந்திர வாடகை மிகவும் அதிகரித்திருப்பதாலும் தமது காலபோக நெற்செய்கையை மேற்கொள்ளமுடியாமல் விவசாயிகள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, யாழ். கமநல சேவைத் திணைக்களத்தின் மூலம் விதை நெல்லைப் பெறுவதற்கு விவசாயிகள் முயற்சித்த போதும், தற்போதைய நிலையில் தாம் விதை நெல்லைப் பெற்றுத்தர முடியாமலுள்ளதாக யாழ். கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். (ப-79)

## வலுவிழந்தோர் உரிமைகள் பயிற்சிப் பட்டறை சனிக்கிழமை

வடமராட்சி, ஒக்.11

வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஆழிப்பேரலை தொடர் முன்னோடி செயற்றிட்டத்தின் கீழ் வலுவிழந்தவர்கள் உரிமைகள் பற்றிய இரண்டாவது பயிற்சிப்பட்டறை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4மணி வரை பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் யாழ். திட்ட ஊழியர் நோ.அ.நிக்சன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் செல்வி இந்திரா செல்வநாயகம் ஆகியோர் வளவளாளர்களாக இருந்து பயிற்சிப் பட்டறையை நடத்துவார்கள்.

இப்பயிற்சிப் பட்டறையில் தெரிவுசெய்யப்பட்ட அரச ஊழியர்கள், அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள், வலுவிழந்தோரின் பெற்றோர்கள் கலந்துகொள்வார்கள்.

இதன் முதலாவது பயிற்சிப்பட்டறை கடந்த 30ஆம் திகதி நடைபெற்றபோது ,30 பேர் பங்குபற்றியிருந்தனர். (202)

## மணல் தட்டுப்பாட்டால் தாமதமாகும் கட்டடவேலை

நவாலி,ஒக்.11

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையின் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகியும் இதற்கான கட்டட வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அடிக்கல் கடந்த ஒகஸ்ட் மாதம் நடப்பட்டது. ஆனால், கட்டட வேலைகள் மணல் தட்டுப்பாடு காரணமாக ஆரம்பிக்க முடியாதிருப்பதாக கட்டட ஒப்பந்தகாரர் தெரிவிக்கின்றனர். (ப-100)

**தடைசெய்த நிறமூட்டியைப் பயன்படுத்தி**

## தேன்முறுக்கு தயாரித்தவருக்கு 5ஆயிரம் ரூபா அபராதம்

வலி.தென்மேற்கு. ஒக்.11

தடைசெய்யப்பட்ட நிறமூட்டியை பயன்படுத்தி தேன்முறுக்கு தயாரித்ததாக குற்றம் சாட்டி பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் எதிரிக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் என்.நிர்மலானந்தன் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார். அனுமதிக்கப்படாத நிறமூட்டியை பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட தேன்முறுக்கின் மாதிரி எடுக்கப்பட்டு கொழும்பிலுள்ள அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. பரிசோதனையின்போது உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் தடைசெய்யப்பட்ட நிறமூட்டியை(நிறத்தை) பயன்படுத்தி தேன்முறுக்கு தயாரிக்கப்பட்டிருந்தது உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதனை அடுத்து பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகரினால் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 4ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிபதி சரோஜினி இளங்கோவன் எதிரியை குற்றவாளியாகக் கண்டு அவருக்கு இத் தீர்ப்பை அளித்தார். அத்துடன் இனிமேல் தடைசெய்யப்பட்ட நிறமூட்டியைப் பயன்படுத்தி தேன்முறுக்கு தயாரித்தால் கடும் தண்டனை வழங்கப்படும் என்றும் நீதிபதி எச்சரிக்கை செய்தார். (ப-135)

## இலுப்பெண்ணெய்க்கு பெரும் மவுசு

நவாலி,ஒக்.11

ஆனைக்கோட்டையில் நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய் என்பவற்றிற்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளது.

தேங்காயெண்ணெய், சமையல் எண்ணெய் முதலியவற்றிற்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினால் அநேகமான மக்கள் சமையலுக்கும் தலைக்கு வைப்பற்கும் நல்லெண்ணெயையே பாவிக்கின்றனர்.

இன்னும் சிலர் இலுப்பெண்ணையை சாப்பாட்டிற்கும் விளக்கெரிக்கவும் பயன்படுத்துகின்றனர்.

இதனால், இவற்றுக்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளது. ஒரு போத்தல் நல்லெண்ணெய் 250 ரூபாவாகவும் இலுப்பெண்ணெய் 200 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. (ப-100)

## இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு லயன்ஸ் கழகம் உதவி வழங்கியது

வடமராட்சி,ஒக்.11

தற்போதைய அனர்த்தங்களால் வரணி, கொடிகாமம் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, கரவெட்டிப் பகுதி பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கு வடமராட்சி லயன்ஸ்கழகம் உதவிவருகிறது.

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் தங்கியுள்ள 130 குடும்பங்களுக்கு அரிசி, பருப்பு, சீனி, உப்பு, தீப்பெட்டி போன்ற பொருள்களை வழங்கியது.

அத்துடன் இக் குடும்பங்களுக்கும் கொற்றாவத்தை தமிழ்க்கலவன் பாடசாலையில் தங்கியுள்ள 111 குடும்பங்களுக்கும் நெல்லியடி கிழக்கு சுடர்ஒளி சனசமூக நிலைய சுற்றாடலில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த 55 குடும்பங்களுக்கும் இலவச மருத்துவமுகாம் தனித்தனியே நடத்தப்பட்டு மருந்து வகைகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

கட்டைவேலி பாடசாலையில் தங்கியுள்ள 36 குடும்பங்களைச்சேர்ந்த மாணவர்களுக்கு கொப்பிகளும் பென்சில்களும், கரவெட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த 7ஆம் வகுப்புவரை கல்விகற்கும் மாணவர்களுக்கு கொப்பிகளும் வழங்கப்பட்டன.

இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப தொடர்ந்தும் உதவிகளை வடமராட்சி லயன்ஸ் கழகம் வழங்கவிருப்பதாக அதன் தலைவர் டாக்டர் எம்.தங்கராசா தெரிவித்தார். (202)

## மலேரியா இரத்த பரிசோதனை

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நடமாடும் மலேரியா இரத்த பரிசோதனை இவ்வாரம் முதல் பொது சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ப-135)

## பங்கீட்டு அட்டைகளுக்கு பணத்திற்கு உலர் உணவு

வலி.தென்மேற்கு.ஒக்.11

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அட்டைக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகியவற்றை பணத்திற்கு தனது கிளைகள் ஊடாக வழங்கி வருகின்றது.

இதேவேளை, 10 வயதுக்குட்பட்ட சிறுவர் மற்றும் குழந்தைகளுக்கு பால்மாவும் வழங்கப்படுகின்றது. பங்கீட்டு அட்டைக்கு 1/2 லீற்றர் வீதம் மரக்கறி எண்ணெய்யும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேசமயம், பங்கீட்டு அட்டைக்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணையையும்சங்க எரிபொருள் நிலையத்தில் வைத்து கடந்த சில தினங்களாக வழங்கப்பட்டு வருகின்றது. மாதகல் பகுதியிலுள்ள மக்களுக்கான மண்எண்ணெய் தனியார் எரிபொருள் நிலையத்தின் மூலம் வழங்கப்படுவதால் பாவனையாளர்கள் அதனைப் பெற சிரமப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (ப-130)

## உள்ளூர் வளங்களை கால்நடைகளின் தீவனமாகப் பயன்படுத்தப் பயிற்சி

வடமராட்சி, ஒக்.11

கால்நடைகளுக்கான தீவனப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இது தொடர்பான பயிற்சி வகுப்பு பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆடு, மாடு போன்ற கால்நடைகளை வளர்ப்போர் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பினால் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் சி.வசிகரன் கேட்டுள்ளார். (202)

## நெல்விதைப்பு ஆரம்பம்

உடுப்பிட்டி, ஒக்.11

வல்லைவெளி விவசாயிகள் பருவகால நெல்விதைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பருவகால மழையை நம்பி வல்லைவெளி வயல்களில் வருடா வருடம் விவசாயிகள் நெல்விதைப்பது வழக்கம்.

தற்போது பருவகால மழை பெய்வதில் தாமதமானபோதும் நெல்விதைப்பதற்காக உழுது, வரம்பு கட்டும் வேலைகளில் மேற்படி விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.(202-155)

## மிருசுவில், தவசிகுளம் பகுதிகளுக்கான மின்விநியோகம் திடீரென நிறுத்தம்

தென்மராட்சி, ஒக்.11

தென்மராட்சி கிழக்கு, மிருசுவில், தவசிகுளம் பகுதிகளில் கடந்த பத்து தினங்களாக மின்விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த 75இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட பகுதிகளுக்குத் திடீரென மின்சார விநியோகம் நிறுத்தப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை என சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## கனியுப்புக்கள் நிறைந்த வற்றாளைக்கிழங்கு

குறைந்த விலையில் குறைந்த காலப்பகுதிக்குள் உற்பத்தி செய்யக்கூடிய உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்யவேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. எனவே, வற்றாளைப் பயிர் சிறந்த தரமுள்ள மாப்பொருள், கனியுப்புக்கள் நிறைந்த பயிராகவும் குறுகிய காலத்தில் மிகக்குறைந்த பிரயத்தனத்துடன் பயிரிடக்கூடிய இலகுவான பயிராகவும் விளங்குவதனால் இதனைத் தற்போது பயிரிட்டு வந்தால் பயன் அ[illegible]யலாம்.

யப்பானில் போர்க்காலவேளையில் அரிசிக்குப் பதிலாக வற்றாளைக்கிழங்கையே பிரதான உணவாகக் கொண்டனர்.

வற்றாளை வறட்சியையும் உவரையும் சகித்து வளரக்கூடிய ஒரு பயிராகும். மேலும் இப்பயிரை யாழ்.குடாநாட்டில் சகல பிரதேசங்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும், ஏனைய இடங்களிலும் இலகுவாகப் பயிரிடலாம்.

வற்றாளையின் கிழங்கினையும் அதன் இலையினையும் உணவாகப் பயன்படுத்தலாம். வற்றாளை அதிகளவு விற்றமின் 'ஏ' கரோட்டின் போன்ற அத்தியாவசிய சத்துக்களைக் கொண்டுள்ளது. இதன் கிழங்கு 3 மாதம் வரை சேமித்து வைக்கக்கூடியதுமாக காணப்படுகின்றது.

ஒன்றுவிட்ட நாளில் இதனை உணவாக உண்ணமுடியும். ஒரு சதுர மீற்றர் பயிர்த்துண்டத்தில் இருந்து 2கிலோகிராம் கிழங்கை உற்பத்தி செய்ய முடியும். 50 சதுர மீற்றர் அளவான காணித்துண்டத்தில் வற்றாளையை உற்பத்தி செய்வதன் மூலம் ஒரு குடும்பத்தினரின் உணவுத்தேவையைப் பூர்த்திசெய்யமுடியும். எனவே, சகலரும் வற்றாளையை உற்பத்தி செய்து தற்போது நிலவும் பட்டினியில் இருந்து எமது மக்களைக் கா[illegible] வற்றாளைச் செய்கை பற்றிய மேலதிக விவரங்களுக்கு அவ்வப்பகுதி விவசாயப் போதனாசிரியரை நாடவும்.

**வி.பாலசுப்பிரமணியம்**
பாடவிதான உத்தியோகத்தர்,
பிரதி விவசாயப்பணிப்பாளர் (விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## இராணுவத்தினர் உணவுப்பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக்.11

தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள மக்களுக்கு இராணுவத்தினர் கடந்த இரண்டு நாள்களாக பங்கீட்டு அடிப்படையில் உணவுப் பொருள்களை விநியோகம் செய்துள்ளார்கள்.

அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா வகைகள் மற்றும் மீன்ரின் என அத்தியாவசியப் பொருள்களை பணத்திற்கு விநியோகித்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பொருள்களைப் பெறுவதற்காக மக்கள் நீண்டவரிசையில் நின்று பெற்றுச் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது.(202-68)

## உலக உணவு நிறுவனம் உலர் உணவு உதவி

நவாலி,ஒக்.11

ஆனைக்கோட்டை யாவில் குளத்தை ஆழமாக்கும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு உலக உணவு நிறுவனம் சாவற்கட்டு ப.நோ.கூ.சங்க கிளையூடாக அரிசி, மீன்ரின், சீனி, மா, பருப்பு போன்ற உலர் உணவுப் பொருள்களை இலவசமாக வழங்கியுள்ளது. (ப-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளங்கலைஞர் இசை வகுப்புகள்

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்பட்டுவந்த இசை வகுப்புகள் தொடர்ந்தும் விஜயதசமி முதல் நடைபெற்று வருகின்றன என்றும் -

இவ்வகுப்புகளில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் மன்ற அலுவலகத்தில் தொடர்புகொண்டு கற்கைநெறிகளைத் தொடரமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதல் திருப்பலி - 11.10.2006



அருட்தந்தை லாசறஸ் யூஜின் றெஜினோல்ட் அடிகளார் -(செ.த) அச்சுவேலி புனித அந்தோனியார் தேவாலயத்தில் முதல் திருப்பலி கொடுக்கும் இந் நாளில் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவி மக்கள் எல்லோரும் மன மகிழ்வுடன் வாழ இறையருள் வேண்டியும், முதல் திருப்பலி சிறப்புடன் அமையவும் அச்சுவேலி மக்கள் சார்பாக வாழ்த்தி வரவேற்கின்றோம்.

இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்,
வீடியோ கலாமினி,
அச்சுவேலி - 0602212431

(51126)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி வயிரமுத்து செல்லம்மா



தோற்றம் 05.05.1945 மறைவு 09.09.2006

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

நிரந்தர முகவரி:
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை கிழக்கு.

நண்பர்கள்.

(54228)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 11 - 01 - 1937



மறைவு 11 - 09 - 2006

பழை, வீமன்காமம், மாவிட்டபுரத்தைச் சேர்ந்த

### செல்வி சின்னத்தம்பி அன்னலட்சுமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [11.10.2006] புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

முத்தொட்டிமட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.
க.அன்னமுத்து (சகோதரி),
ந.யோகராசா (மருமகன்).


## COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio . ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 16/10/2006 - 09.00

3 மாதகால Diploma in Computerized Accounting & Tally புதிய பிரிவுகள் ஆரம்பம்.
ஆரம்பம். Batch I :- 14/10/2006, Batch II :- 15/10/2006


## சோதிடம்

புரட்டாதிச் சனி வாரத்தையொட்டி வியாழமாற்றம், இராகு, கேது மாற்றம் என்பவற்றுடன் சனீஸ்வர வழிபாடு விற்பனையாகின்றது.

ஆக்கியோன் மந்திர சாஸ்திர
ஜோதிடர் சியாம் அன்புஜி

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்.நகர்.

## விற்பனைக்கு

மில் பாவனைக்கு உரிய 10HP இன்ஜின், 3 கிறைண்டர், ஈ.ரஅரிசி டிஸ், 10HP MOTOR, உழுந்து அரைக்கும் இயந்திரம், MD-90 (21), Fridge.

தொடர்பு
எஸ்.சிவகாந்தன்
இணுவில் மேற்கு, வட்டுவினி.
Tele :- 9201

## கோழி தேவை

கல்பேட், புறொயிலர் கொள்வனவு செய்யப்படும்

வினஸ்பாம்
திருநெல்வேலி சந்தி,
(நல்லூர் பிரதேச செயலகம் முன்பாக)
T.P. :- 021 4590484

## அறிவித்தல்

### பெயர்மாற்றம்

விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறையில் வதியும் சின்னத்தம்பி சூரிய ஜெயபாபு கைம்பெண், ஜீவராணியும், மார்க்கண்டு மகள் ஜீவராணியுமாகிய நான் 02.11.1993இல் ஆதார வைத்தியசாலையில் பிறந்த 'சூரிய ஜெயப்பாபு புரட்சி' என்னும் எனது மகனின் பெயரை மாற்றி அப்பெயருக்குப் பதிலாக 'சூரிய ஜெயபாபு சூரியராஜ்' என்னும் பெயரை இட்டு 2006ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ஆம் திகதியிலிருந்து எல்லாக் கருமங்களுக்கும் ஆவணங்களிலும் பாவிப்பதாக இத்தால் பொது மக்களுக்கு அறியக்கொடுக்கின்றேன்.

சூ.ஜீவராணி
(ஒப்பம் சூ.ஜீவராணி)
தாய்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கிருஷ்ணகுமாரி உதயகுமார்
அவர்களின் அன்புத் தாய்

திருமதி

### கெங்காதேவி சுப்பிரமணியம்

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/மானிப்பாய் செனற். ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை

## சாவகச்சேரி நகரசபைப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, ஒக்.11

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பின்வரும் இடங்களில் இன்று புதன்கிழமை தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து ஏற்றப்படுமென சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இன்று காலை 8 மணிதொடக்கம் கல்வயல் குடும்பநல உத்தியோகத்தர் அலுவலகம், கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம், சாவகச்சேரி நகரசபை ஆகிய இடங்களிலும் -

முற்பகல் 11 மணி தொடக்கம் நுணாவில் மேற்கு விளைவேலி மருதடிப்பிள்ளையார் கோயிலடி, கல்வயல் வேதவனப்பிள்ளையார் கோயிலடி, மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும், நாளை பல்வேறு இடங்களிலும் தடுப்பூசி ஏற்றப்படுமென பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ். மணிவண்ணம் தெரிவித்தார்.

## மரண அறிவித்தலும் 31ஆம் நாள் நினைவும்

### திருமதி குமாரசாமி தங்கரத்தினம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி தங்கரத்தினம் 11.09.2006 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா (விதானையார்) - இராசம்மா (கொக்குவில்) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் (சட்டத்தரணி) - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குமாரசாமி (சுப்பிரண்டன், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தானம்) அவர்களின்அன்பு மனைவியும் சித்திரா, ராஜினி (பேபி-பிரான்ஸ்), சாந்தினி, குமுதினி, மாயாசுதன், ரங்காசுதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் (யாழ். கச்சேரி), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), பாலசுப்பிரமணியம் (இலங்கை புகையிரதத் திணைக்களம்), சிவராசா (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), சிவனேஸ்வரி, விஜயலட்சுமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் பரமேஸ்வரியின் அன்புச் சகோதரியும் சந்திரிகா, ராஜிந்தன் (பிரான்ஸ்), ராஜிந்தினி (பிரான்ஸ்), ராஜசிவா (கனடா), சுதர்சன் (லண்டன்), சுஜீவன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியும் அலெக்ஸ் சான்றின், பிரியங்கா, விஜய், புருஷோத், மீரா, மாதவன் (பிரான்ஸ்), விதுசன் (கனடா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 12.09.2006 செவ்வாய்க்கிழமை நீர்வேலி இந்துமயானத்தில் நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம். தவிர்க்கமுடியாத காரணத்தினால் அறிவிக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

**இன்று (11.10.2006) புதன்கிழமை காலை அவரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய போசனம் இடம்பெறும். பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

அரசகேசரிப்பிள்ளையார் கோயிலடி,
நீர்வேலி.

(54296)

தகவல்:
மகள்மார், மகன்மார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி எஸ்தர் லோறன்ஸ்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி எஸ்தர் லோறன்ஸ் அவர்கள் 07.10.2006 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குலம் லோறன்சின் அன்பு மனைவியும் தமயந்தி, சகுந்தலா, கௌசல்யா, மணிமேகலை ஆகியோரின் அன்புத் தாயும் அருள் சுதன், பிரமா ஆகியோரின் அன்பு மாமியும் றிச்சட், திமத்தி, றஜீவ், சஞ்ஜீவ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (12.10.2006) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5681, Montevideo Road,
Mississauga,
Ontario L5N 2M5,
Canada.
T.P. 001 9058214031

(54292)

தகவல்:
இராஜேந்திரா சபாபதிப்பிள்ளை
உடுவில் வீதி,
மானிப்பாய்.

### திருமதி ரஞ்சனாதேவி ஸ்ரீறாகுலன்



திருநெல்வேலி, கேணியடியைப் பிறப்பிடமாகவும் திருச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றஞ்சனாதேவி (ரஞ்சனா) ஸ்ரீறாகுலன் 08.10.2006 ஞாயிற்றுக்கிழமை திருச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - தங்கமணி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி(M.S) - பாக்கியம் தம்பதியரின் மருமகளும் M.Sஸ்ரீறாகுலனின் (சோதிட விலாச புத்தகசாலை, யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் ஸ்ரீ.சுயந்தினி (லண்டன்), ஸ்ரீ.றிஷாந்தன் (மெற்றாஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் புவனேந்திரன் (லண்டன்), மாலினிதேவி (லண்டன்), அமிர்தாதேவி (லண்டன்), தவீந்திரன் (உடுப்பிட்டி) ஆகியோரின் சகோதரியும் சிவகுமாரின் (லண்டன்) மாமியும் தர்மராஜாவின் (ஆனைக்கோட்டை) சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2006) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் திருச்சி 452, இலக்க இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
திருநெல்வேலி.

(54291)

தகவல்:
M.S ஸ்ரீ றாகுலன் (கணவர்)

### தில்லைநாதர் சுப்பிரமணியம்

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதர் சுப்பிரமணியம் அவர்கள் நேற்றுமுன்தினம் (09.10.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும் நடராசா (கனடா), தனபாலசுந்தரம் (NECORD வவுனியா), சாரதாம்பாள், மாசிலாமணி (வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்), புவனேஸ்வரன் (கனடா), பரமேஸ்வரன் (DPDHS Office யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஸ்ணவேணி, பத்மாசனி, சிவராஜினி, ராஜேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக சல்பரவை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(54283)

தகவல்:
சு.மாசிலாமணி (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# பஞ்சாயத்துமுறை யாருக்கு?

தாங்கள் இழந்த தங்களது அரசியல், பொருளாதார, சமூக, வாழ்வியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக முதலில் அஹிம்சை வழியிலும், இப்போது ஆயுத வழியிலும் ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்றது ஈழத்தமிழினம்.

ஈழத் தமிழர்களின் இந்த சுதந்திரப் போராட்டத்தை 'பயங்கரவாதம்' என்று சித்திரித்து, அந்தப் போராளிகளை அழித்தொழிக்க முயலும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள், ஈழத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணத் தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறவில்லை என்ற படத்தை சர்வதேசத்துக்குக் காட்டவும் பின்நிற்பதில்லை.

காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளால் இந்த நோக்கத்துக்காக பல்வேறு அரசியல் அபத்த நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. சர்வகட்சி மாநாடு, வட்ட மேசை மாநாடு, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கலந்துரையாடல் என்று அவ்வப்போது மேடையேற்றப்பட்ட இந்தத் திருகுதாளங்களின் வரிசையில் கடைசியாக செயலுருப் பெற்றிருப்பதுதான் 'சகல கட்சிப் பிரதிநிதிகள் குழு' என்ற அங்கம்.

தென்னிலங்கைக் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட இக்குழுவில் ஐ.தே.கட்சி இல்லை; ஜே.வி.பி., இ.தொ.கா., மேல் மாகாண மக்கள் முன்னணி போன்றவை கடைசியாக நடைபெற்ற இக்குழுவின் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தென்னிலங்கையின் யோசனையை அரசுக்கு சிபாரிசு செய்யவென ஸ்தாபிக்கப்பட்ட இக்குழு, பல சுற்றுப் பேச்சுக்களை நடத்திய பின்னர் நேற்றுமுன்தினம் செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கொழும்பில் நடத்தி விடுத்திருக்கும் அறிவிப்பு தமிழர் தரப்பை அதிர்ச்சிக்குள் மட்டுமல்ல, ஆச்சரியத்துக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றது.

தீர்வு யோசனை என்பது 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போல' ஆயிற்றோ என்று சிந்திக்க வைத்திருக்கிறது அந்த அறிவிப்பு.

இனப்பிரச்சினைக்கான தென்னிலங்கையின் தீர்வு யோசனை இதுதான் என்று ஒரு திட்டத்தை முன்வைக்க வேண்டிய கடப்பாடும், பொறுப்பும் உள்ள இக்குழு, அதற்கான முயற்சியின் ஒரு கட்டமாக இந்தியாவில் கிராமங்கள் வரை அதிகாரங்களைப் பகிர வழி செய்திருப்பதாகக் கூறப்படும் 'பஞ்சாயத்து முறை' குறித்து நேரில் ஆராய்வதற்கு இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்யப் போகின்றது என்பதுதான் அந்த வியப்புத் தரும் அறிவிப்பு.

கட்டிறுக்கமான சிங்கள - பௌத்த எதேச்சாதிகார அரச வடிவமைப்பான இந்த அரசமைப்புக்குள் தமிழ்த் தேசத்தின் தனித்துவமான பண்பியல்புகள் புதைக்கப்பட்டு, அந்த அரசமைப்புச் சட்டத்தின் நெகிழ்வற்ற உடும்புப் பிடிக்குள் தமிழினம் அடிமைப்படுத்தப்பட்டு, விலங்கிடப்பட்டு, சிறையிடப்பட்ட நிலையில் உள்ளது. அதிலிருந்து விடுபட்டு தனித்துவமான ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் தனக்குரிய சுயநிர்ணய அடிப்படையில் தனது அரசியல் தலைவிதியைத் தானே நிர்ணயிக்கும் அரச ஆட்சி முறைமையை ஸ்தாபிக்கத் தமிழினம் உயிரும், உதிரமும், உடைமைகளும் இழந்து சளைக்காமல் போராடிக் கொண்டிருக்கின்றது.

அத்தகைய தனித் தேசக் கட்டமைப்புக்கு மாற்றாக ஒன்றுபட்ட இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி முறைத் தீர்வு குறித்து இலங்கை அரசுப் பிரதிநிதிகளும், தமிழர் தரப்பின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளனர் என்ற கோட்பாட்டு ரீதியான உடன்பாடு 2002 டிசெம்பரில் நோர்வேயில் இடம்பெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சில் எட்டப்பட்டது.

சமஷ்டித் தீர்வு பற்றிய அந்த 'ஒஸ்லோ பிரகடனம்' இப்போது காற்றோடு கலந்து காணாமல் போய்விட்டது போலும்!

இப்போது தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுத் திட்ட யோசனை ஒன்றைத் தயாரிப்பதற்கு பஞ்சாயத்து முறையை ஆராயப் புறப்பட்டிருக்கின்றது தென்னிலங்கை. என்னே வேடிக்கை இது.....!

முன்னர், ஐம்பதுகளில் தமிழர்கள் சமஷ்டி ஆட்சி முறை கோரி போராட்டங்கள் நடத்தியபோது அது புறக்கணிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டது. அரச ஒடுக்குமுறை தொடர்ந்தது; தீவிரமடைந்தது. அதனால், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரத் தமிழீழத் தனியரசு கோரும் திசையை நோக்கித் தமிழர்களது போராட்டம் திரும்பியது.

அதையடுத்து நிலைமையைச் சமாளிக்கும் எத்தனங்களாக இடையிடையே 'மாவட்ட சபை', 'மாகாணசபை', 'பிரதேச ஒன்றியங்களின் கூட்டமைப்பு' என அரசியல் செப்படி வித்தைத் திட்டங்கள் தென்னிலங்கையில் முன்வைக்கப்பட்டன.

ஆனால், அவை எவையும் ஈழத் தமிழர்களின் நியாயமான - சட்டபூர்வமான - அவர்களுக்கு உரிமையுள்ள - அபிலாஷைகளை நிறைவு செய்யத் தவறியமையால் தமிழர்களின் தனியரசுக்கான போராட்டம் தங்கு தடையின்றித் தொடர்ந்து, முனைப்புற்று, தீர்க்கமான ஒரு கட்டத்தை எட்டியுள்ளது. இந்தச் சமயத்தில்தான் சர்வதேசத் தலையீடு, பங்களிப்பு போன்றவை காரணமாக 'உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி முறைத் தீர்வு குறித்து ஆராய' தென்னிலங்கை அரசுத் தரப்பும், தமிழர் தரப்பும் சர்வதேசத்தின் - மூன்றாம் தரப்பின் - பிரதிநிதிகள் முன்னிலையில் இணங்கின.

தென்னிலங்கையின் அரசியல் குழப்பங்களால் அந்த சமரச முயற்சி அத்துடன் தடைப்பட்டு நிற்க, இப்போது புதிதாக ஆட்சிக்கு வந்த தென்னிலங்கை அரசு, தீர்வுக்கு யோசனைத் திட்டமாக இந்தியாவின் கிராமப் பஞ்சாயத்து முறை குறித்து ஆராயப் புறப்பட்டிருக்கின்றது.

சமஷ்டி முறைத் தீர்வைப் புறக்கணித்து, மாவட்ட சபைகள், மாகாண சபைகள், பிராந்திய சபைகள் போன்றவற்றை எல்லாம் விட்டுக் கீழிறங்கி, கிராமங்களுக்கு அதிகாரம் பகிரும் பஞ்சாயத்து முறை குறித்து ஆராயப் புறப்பட்டிருப்பது தற்காலத்திலிருந்து கற்காலத்துக்குத் திரும்பும் முயற்சியின்றி வேறில்லை.

ஈழத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான தீர்வு ஒன்றை வழங்காமல் அவர்களைத் தொடர்ந்து அடிமைப் பட்ட சமூகமாக அடக்கி, ஒடுக்கி வைத்திருப்பதே தென்னிலங்கையின் ஒரே கருத்தியல் என்பது, தீர்வுத் திட்டத்துக்கு பஞ்சாயத்து முறையை நாடும் பண்பிலிருந்து புலனாகின்றது.

# ஆமை வேகத்தில் நகரும் வாகனங்களால் ஆஸ்பத்திரி வீதியில் போக்குவரத்து நெருக்கடி

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பாதசாரிகள் வலியுறுத்து

மண்டைதீவு, ஒக்.11

யாழ். நகரப் பகுதியில் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள இருவழிப் போக்குவரத்து வீதி நகரத்தில் உள்ள நெருக்கடி மிகுந்த பகுதி யாக மாறியுள்ளது.

இந்த வீதியில் ஆமை வேகத்தில் நகரும் தனியார் மினிபஸ்களும், இ.போ.ச. பஸ்களும் இந்த நெரிசலை மேலும் அதிகரித்து வருவதுடன் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்தும், மினிபஸ் தரிப்பிடத்தில் இருந்தும் ஆஸ்பத்திரி வீதியூடாக, பருத்தித்துறை வீதியூடாகவும் மற்றும் முதலாம் குறுக்குத்தெரு ஊடாக பிரதான வீதி மூலம் பயணிக்கும் வாகனங்களே தினமும் இவ்வாறு 'சிலோறேஸ்' (Slow Race) நடத்துகின்றமை வைத்தியசாலையின் பிரதான வாயிலைத் தாண்டியதும் இவை வழமைபோல் வேகப்போட்டியில் இறங்கிவிடுகின்றன.

பஸ் நிலையப்பகுதியில் இருந்து வைத்தியசாலையின் பிரதான வாயில் வரை இவை 'முழத்துக்கு முழம்' நிறுத்தப்பட்டு பயணிகளை ஏற்றும் வழக்கத்தை கொண்டுள்ளன. இதனால் இவற்றின் பின்னால் வரும் வாகனங்களும் திடீரென வேகத்தைக் குறைக்க வேண்டியதுடன், சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று முட்டி மோத வேண்டியும் ஏற்பட்டு வருகின்றது.

### வீதியோர நடைபாதையும் வியாபாரிகளால் ஆக்கிரமிப்பு

வீதியின் நடைபாதை, வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் பாதசாரிகளும் வாகனப் போக்குவரத்து வீதியையே பயன்படுத்துகின்றனர். வைத்தியசாலை, வங்கிகள் மற்றும் நிறுவனங்களுக்கு வருவோரின் வாகனங்களும் இந்த வீதியோரமாக நிறுத்தப்படுகின்றன.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இருந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மூடப்பட்டதை அடுத்து வைத்தியசாலைக்கு நோயாளர்களைப் பார்வையிட வரு வோர் வைத்தியசாலைக்கு முன்பாக - பிரதான வீதியோரமாக சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி விடுகின்றனர். இதனால் நோயாளர்களை பார்வையிடும் நேரங்களில் நெரிசல் அதிகமாகி விடுகின்றது.

எனவே, சம்மந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (88)

# உயர்தரப் பரீட்சை முடிவுகள் இங்கு வந்து சேர்வதில் தாமதம்!

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பாடசாலைகளின் க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று செவ்வாய்க்கிழமை வரை யாழ். கல்வித் திணைக்களத்திற்குவந்து சேரவில்லை. மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளைத் தாங்கள் எதிர்பார்த்த வண்ணம் உள் ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ். பிரதம தபாலதிபர் கே.சிவராஜாவிடம் கேட்ட போது:-

வழமையாக பரீட்சை முடிவுகள் வெளியாகும் போது முடிவுகள் அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் எங்களுக்கு அறிவிப்பது வழக்கம். இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளது குறித்து பரீட்சைத் திணைக்களம் எமது தபாலகத்துக்கு எவ்வித தகவல்களையும் இன்னமும் தெரிவிக்கவில்லை - என்றார்.

இதேவேளை, பரீட்சை முடிவுகளை அறிவதற்குப் பாடசாலை மாணவர்களும், பெற்றோர்களும் மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

இம்மாதம் 6ஆம் திகதி காலை பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் வெளிவந்த முடிவுகளை அறிந்து கொண்ட போதிலும் பெறுபேறுகள் அட்டவணையில் பார்த்துத்தான் அதனை உறுதிப்படுத்திக்கொள்ள காத்திருப்பதாக மாணவர்களும் பெற்றோர்களும் தெரிவிக்கின்றனர்.

கல்விப் பகுதியைச் சேர்ந்த அதிகாரிகள் குடாநாட்டு மாணவர்களின் பெறுபேறுகளை நேரடியாக எடுத்துவந்து கல்வி வலயங்கள் ஊடாக விரைந்து வெளியிடுவது வழமையாகும் ஆகும். (அ-111)

# விசேட மருந்துகளை மீண்டும் ஒருமுறை கொழும்பிலிருந்து தருவிக்க ஏற்பாடு

## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

கொழும்பிலிருந்து விசேட மருந்துகளைத் தருவிக்கும் ஏற்பாடு தொடர்வதாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சுகாதார சேவை கள் பணிப்பாளர் விடுத்த செய்திக் குறிப்பில்:-

சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை பெற்ற பல நோயாளர்களின் வேண்டுகோளின் பேரில் அரச வைத்தியசாலைகளிலும் யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் மருந்தகங்களிலும் கிடைக்காத மருந்துகளை கொழும்பிலிருந்து பெற்றுக்கொடுக்க முன்னர் ஏற்பாடுகளைச் செய்திருந்தோம்.

அதேபோல வேறு சில நோய் நிலைகளுக்கான இங்கு பெறமுடியாத மருந்துகளை பெற்றுத்தருமாறு பல நோயாளர்களும் வைத்திய நிபுணர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இன்றைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இந்த மனிதாபிமான உதவியை மீண்டும் ஒருமுறை ஏற்பாடு செய்யவுள்ளோம்.

அரச வைத்தியசாலைகளிலோ அல்லது யாழ். மாவட்ட தனியார் மருந்தகங்களிலோ கிடைக்காத மருந்துகளை கொழும்பில் இருந்து தரு விக்க விரும்பும் நோயாளர்கள் தமக் குத் தேவையான மருந்துகளின் விவரங்களை வைத்தியசாலை வீதியிலுள்ள பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் உடனடியாக பதிவுசெய்து அதற்கான பணத்தை செலுத்தவும்.

இவர்களுக்கான மருந்துகளை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படும் - என்று அதில் உள்ளது.

# கிளிநொச்சியில் கடமையாற்றும் அரச அலுவலரை விரைவில் கடமைக்குத் திரும்புமாறு அழைப்பு

யாழ்.மாவட்டத்திலிருந்து வந்து கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் மத்திய, மாகாண அரச அலுவலர்களை விரைவில் கடமையில் இணைந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், கேட்டுள்ளார்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில்:-

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் மத்திய, மாகாண அரச ஊழியர்களிடம் இந்த வேண்டு கோளை முன்வைக்கின்றேன்.

தாங்களும், தங்கள் குடும்பத்தினரும் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக - படும் துன்பங்கள் யாவையும் அறிந்து நான் மிகவும் மனவேதனை அடைந்துள்ளேன்.

தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தற்காலிக கூடாரங்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்கியிருப்பது தாங்கள் அறிந்ததே. அவர்களுக்கான உடனடித் தேவைகள் பலவற்றை நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருப்பதால் கிளிநொச்சி மாவட்ட அரச ஊழியர்களின் தேவை மிகவும் அவசியமாகவுள்ளது.

எனவே, சகலரும் காலம் தாழ்த்தாது தங்கள் கடமையில் இணைந்து மக்களுக்கான சேவையை வழங்க உதவும்படி அன்புடன் வினயமாக வேண்டிக்கொள்கின்றேன் - என்று அதில் உள்ளது.

# பங்கீட்டுக்கு பொருள்கள் வழங்கப்படும் கால அட்டவணையைப் பார்வைக்கு வைக்கவும்

## பொதுமக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை

நல்லூர், ஒக்.11

குடும்ப அட்டைகளுக்கான பங்கீட்டுப் பொருள்களை விநியோகிக்கும் கால அட்டவணைகளை பொது மக்களின் கவனத்திற்கு வைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாவனையாளர்கள் கோரியுள்ளனர்.

இதன்படி ஒவ்வொரு கட்ட விநியோகமும் எந்தத் திகதியில் ஆரம்பிக்கப்படுகின்றது எந்தத் திகதியில் முடிவடைகின்றன என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்தின் அவர்கள் அக்காலப் பகுதிக்குள் தமக்குரிய பொருள்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியாத இருக்கும் என்றும் -

பொருள் விநியோகம் செய்யப்படும் காலம் தெரியாமையால் சிலர் அவற்றை உரியமுறையில் பெற்றுக் கொள்ளமுடியாது பெரும் சிரமமடைகின்றனர் என்றும் -கூறப்படுகிறது.

தற்போது நான்காவது கட்ட விநியோகம் இடம்பெறுகின்ற நிலையில் சிலர் இன்னமும் இரண்டாவது, மூன்றாவது கட்ட விநியோகப் பொருள்களைக் கூட பெற்றுக்கொள்ளாது உள் ளனர் என்றும் -

எனவே, உரியவர்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும் என்றும் - பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-111)

# கோழித்தீவனம் இல்லாமையால் இறைச்சிக்காக கோழிகள் அழிப்பு

வடமராட்சி, ஒக்.11

கோழித்தீவனம் இன்மையால் கோழிகளை வளர்க்க முடியாத நிலை யில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 15 ஆயிரம் கோழிகள் இறைச்சிக்காக அழிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2 மாத காலமாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் கோழித்தீவனங்களுக்கு பெரும் பற் றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் கோழி [illegible] முடியாது மலிவு விலையில் அவற்றை இறைச் சிக்காக விற்பனை செய்துள்ளனர்.

அசாதாரண சூழ்நிலை ஏற்பட முன்னர் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 34 ஆயிரம் கோழிகள் வளர்க்கப்பட்டு வந்தன. ஆனால், தற் போதைய கணிப்பின் பிரகாரம் 19 ஆயி ரம் கோழிகளே வளர்க்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எஞ்சிய 15 ஆயிரம் கோழிகளும் இறைச் சிக்காக விற்பனை செய்து அழிக்கப் பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரடங்கு அமுலின் 2 மாதங்கள் பூர்த்தி

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு நேற்றுடன் இரண்டு மாதங்கள் முடிவடைந்தன. இன்று மூன்றாவது மாதம் ஆரம்பமாகிறது.

ஒகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி இரவு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்கு மூன்று நாள்களின் பின்னர் பதிநான்காம் திகதியன்று இரண்டரை மணித்தியாலங்களுக்கு மட்டும் தளர்த்தப்பட்டது.

அதன் பின்னர் 16ஆம் திகதி முழுநாள் ஊரடங்கு அமுல்செய்யப்பட்டு 17 ஆம் திகதி தொடக்கம் நான்கு மணித்தியாலங்ளுக்கு தளர்த்தப்பட்டு வந்தது.

ஒகஸ்ட் இருபதாம் திகதி முதல் இருபத்திரெண்டாம் திகதிவரை ஐந்து மணித்தியாலங்களுக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

இருபத்திநான்காம் திகதி தொடக்கம் ஐந்து நாள்களுக்கு ஊரடங்குத் தளர்வு நேரம் ஆறு மணித்தியாலங்களாக அதிகரிக்கப்பட்டு அடுத்தடுத்த நாள்களில் ஏழு, ஒன்பதரை , பத்து மணித்தியாலங்களாக மேலும் அதிகரிக்கப்பட்டது.

செப்ரெம்பர் மாதம் ஐந்தாம் திகதி தொடக்கம் தொடர்ந்து பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டு இரவு நேரம் மட்டுமே அமுலில் இருந்து வருகிறது.

செப்ரெம்பர் இருபதாம் திகதியிலிருந்தே வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் ஊரடங்கு ஒரே நேரத்தில் தளர்த்தப்பட்டு வருகிறது. அதற்கு முந்திய நாள்களில் வேறுபட்ட நேரங்களில் ஊரடங்கு தளர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## கப்பல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புவோர் தத்தமது பிரதேசங்களிலுள்ள சிவில் அலுவலகங்களில் பதிவு களை மேற்கொண்டு அனுமதி பெறவேண்டும்.

பிரதேச சிவில் நிர்வாக அலுவலகங்களுக்கு கப்பல் பயணத்துக்கான படிவங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. இந்தப் படிவங்களைப் பெறுவோர் அதனைப் பூர்த்தி செய்து கையளிப்பதன் மூலம் பயணத்துக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பிரதேச சிவில் நிர்வாக அலுவலகங்களில் பயணத்துக்கான அனுமதியைப் பெறும் நடைமுறை இம்மாதம் 15ஆம் திகதி முதல் மிக இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும். எனினும் பதினைந்தாம் திகதிக்கு முன்னர் கப்பல் மூலம் பயணம் செய்ய காத்திருப்பவர்கள் மேற்படி நடைமுறையைப் பின்பற்றத் தேவையில்லை - என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (203)

## சுவிஸில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவை மாற்றிக்கொள்வதற்கான உரிமையையும் அவர்கள் தக்க வைத்திருக்கிறார்கள்.இரண்டு தரப்புகளும் பேச்சுக்கு வரவும், பேச்சுக்கான இடம், திகதிகளை நிர்ணயம் செய்வதிலும் என்னால் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முடிந்தது.

அவர்கள் இரு தரப்பினரும் நிபந்தனை எதனையும் முன்வைக்கவில்லை. ஆனால், களநிலைமை குறித்து நாம் கவலை கொள்வதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன. மோதல்கள் நிறுத்தப்பட்டு இரு தரப்புகளும் இன்னும் ஒரிரு வாரங் களில் பேச்சுக்கு வருவார்கள் என்று நான் நம்புகின்றேன் - என்றார் ஹான்ஸ் பிரட்ஸ்கர். (ஐ)

# கப்பல் பயணத்துக்கு பதிவு செய்த மாணவருக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.11

கப்பல் பயணத்துக்குப் பதிவு செய்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களையும் வவுனியா வளாகதத்துக்கு அனுமதிபெற்ற மாணவர்களையும் பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 9 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்துக்கு வருகைதருமாறு பதில் துணைவேந்தர் கேட்டுள்ளார்.

## தம்பிலுவி[illegible]...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்த சிறுவர்களை கருணா குழுவினரே பலாத்காரமாக கடத்திச் சென்றனர் என்றும் - ஆயுதப் பயிற்சிக்காக சிறார்கள் வெலிகந்தை, தீவுச்சேனைப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் - அப்பகுதித் தகவல்களை மேற்கோள்காட்டி இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. (த)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு சென்ற சிறிது நேரத்தில் - பொலிஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு சுமார் அரை மணித்தியாலத்தில் - பாரிய சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது. இதில் ஆனந்தன், பாலசாமி மற்றும் அவரது மனைவி வசந்தி ஆகியோர் உயிரிழந்தனர். இந்தக் குண்டு எங்கு பொருத்தப்பட்டிருந்தது? எவ்வாறு வெடித்தது என்ற தகவல்கள் தெரியவரவில்லை.

இது குறித்து வவுனியா பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## கப்பல் மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுவர் என்றும்- சம்பந்தப்பட்டவர்கள் பயண ஏற்பாடுகளுடன் வருகை தரவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் வந்துகொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீதே படையினர் தாக்குதல் நடத்தினர் எனவும், இதில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் கொல்லப்பட்டனர் என்றும் இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (த)

## திருமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக ஏவப்பட்டு வருகின்றன.

உப்பாறு மற்றும் இறால்குழி பகுதிகள் மூதூருக்கும், கிண்ணியாவுக்குமிடையில் உள்ளன. இங்கிருந்து திருகோணமலைத் துறைமுகத்தை மிக இலகுவாக நேரடியாக அவதானிக்கமுடியும். இதனாலேயே இங்கிருந்தும் புலிகளை அப்புறப்படுத்தும் முயற்சியில் தற்போது படைத்தரப்பு தீவிரமாக இறங்கியுள்ளது என்று இராணுவ உயர் வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## சிறப்புத் தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், வன்னி முன்னரங்கில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட மோதல் ஒன்றில் அவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அவருக்கு லெப்டினன்ட் கேணல் தரம் வழங்கப்பட்டிருக்கிறது. 1990ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட இவர் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் நேரடி வழிநடத்தலில் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்று பல சமர்களில் பங்கேற்றிருந்தார்.

1997ஆம் ஆண்டு புலிகள் உருவாக்கிய லெப். கேணல் விக்ரர் கவச எதிர்ப்புப் படைப் பிரிவுக்கு சிறப்புத் தளபதியாக தலைவர் பிரபாகரனால் நியமிக்கப்பட்டிருந்தார் லெப்டினன்ட் கேணல் அக்பர். (த)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.கவின் அமைச்சுப்பொறுப்புக்களை ஏற்பதா, இல்லையா என்று அதன்பிறகே தீர்மானிக் கப்படும் என்றும் ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும், நாடாளு மன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாணும் பொருட்டும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் அவை தொடர்பான ஆறு விடயங்களில் இரு பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

அந்த இணக்கப்பாட்டை எப்போது, எப்படி நடைமுறைப்படுத்துவது என்ற முடிவுக்கு இந்த இரண்டு கட்சிகளும் இன்னும் வரவில்லை.

எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் ஒரிரு நாள்களில் ஜனாதிபதியைச் சந்தித்து இதுதொடர்பாகப் பேசவுள்ளார். அப்பேச்சில் எடுக்கப்படும் தீர்மானங்கள் எமது கட்சியின் செயற்குழுவுக்கு அறிவிக்கப்பட்டு செயற்குழுவே இறுதித் தீர்மானத்தை மேற்கொண்டு நடைமுறைப் படுத்தும்.

அதன்பிறகுதான் அமைதிமுயற்சிக்கு எந்தமாதிரியான ஒத்துழைப்பை வழங்குவது; அமைச்சுப் பொறுப்புகளை ஏற்பதா, இல்லையா என்றெல்லாம் தீர்மானிக்கப் படும்.

இதுவரைக்கும் ஐ.தே.கட்சியின் எந்த மாதிரியான ஒத்துழைப்பு அரசிற்குத் தேவையென அரசும் எம்மிடம் விளக்கவில்லை. எந்தமாதிரியான ஒத்துழைப்புகள் அரசிற்கு வழங்குவோம் என நாமும் அரசுக்கு இன்றும் தெளிவுபடுத்தவில்லை - எனக்கூறினார்.

# குறிப்பிட்ட திகதிகளில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப் பணிப்பாளர் எஸ். புலித்தேவன், இராணுவப் பேச்சாளர் இ. இளந்திரையன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் நிறைவில் ஊடகவியலாளர்களிடம் தமிழ்ச்செல்வன் கூறிய விடயங்கள் வருமாறு:-

''நோர்வேத் தூதுவருடன் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக உரையாடினோம். முக்கியமாக ஸ்ரீலங்கா அரசு எமது தேசத்தின் மீது கட்டவிழ்த்து விட்டு இருக்கின்ற அரச பயங்கரவாதம், வன்முறைகள், படுகொலைகள் போன்றவற்றை நிறுத்தி நேர்மையான முறையில், இதய சுத்தியுடன் சமாதான முன்னெடுப்புக்கு வரவேண்டும், இதனை சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும், அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்தினோம்.

அரசு ஒரு பக்கம் பேச்சுக்குத் தயார் எனக் கூறிக்கொண்டு, மறு பக்கத்தில் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு பல மனித உரிமை மீறல்களை நிகழ்த்தி வருகிறது. பெரும் மனித அவலத்துக்குள் எமது மக்கள் தள்ளப்பட்டு இருக்கின்றார்கள்.

இந்நிலையில், அரசு தனது பயங்கரவாத செயற்பாடுகளை நிறுத்தி நேர்மையான முறையில், இதயசுத்தியுடன் சமாதானப் பேச்சுக்கு இணங்கிக் கொள்வதை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினோம்.

அடுத்ததாக - முக்கியமாக - இணைத் தலைமை நாடுகள் உட்பட சர்வதேச சமூகமும், அனுசரணையாளர்களும் ஒரு கோரிக்கையை முன்வைத்திருந்தார்கள். இரு தரப்பும் மோதல்களை நிறுத்தி, நிபந்தனையற்ற வகையில் நேரடியாகப் பேச வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருந்தார்கள்.

இந்நிலையில்தான் எமது தலைமைப் பீடம் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளையும், ஆலோசனைகளையும் வரவேற்று மதிப்பளிக்கும் வகையில் பேச்சுக்கான இணக்கப்பாட்டைத் தெரிவித்திருந்தது.

### மீள் பரிசீலனை செய்ய நேரிடும்

ஆனால், ஸ்ரீலங்கா எமது தேசத்தின் மீது பாரிய படை நடவடிக்கைகளையும், வன்முறைகளையும் அதிகரித்துள்ளது. அரசின் நடவடிக்கைகள் தொடருமாயின் எமது நிலைப்பாட்டை நாம் மீள்பரிசீலனை செய்ய வேண்டி வரும் என்பதை முன்னைய சந்திப்புக்களிலும் கடிதம் மூலமாகவும் அனுசரணையாளர்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தோம்.

இன்றும் கூட நோர்வேத் தூதுவரிடம் பேச்சுக்கான இணக்கப்பாட்டை நாம் தெரிவித்திருந்தாலும், இக்காலப் பகுதிக்குள் ஸ்ரீலங்கா அரசுத் தரப்பினர் போலிச் சாட்டுக்களை வைத்துக் கொண்டு எமது தேசத்தின் மீது பாரிய படை நடவடிக்கைகளை முன்னெடுப்பார்களேயானால் எமது முடிவை நாம் மீள்பரிசீலனை செய்து எமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்பதை இன்றைய சந்திப்பில் தெரிவித்திருக்கிறோம்.

பேச்சுக்கான நிர்ண யிக்கப்பட்ட திகதிகளில் பேச்சு நடப்பதா இல்லையா என்பது எமது கையில் இல்லை. சர்வதேச சமூகத்தின் கைகளிலும், ஸ்ரீலங்கா அரசின் கைகளிலும்தான் அது உள்ளது. சூழல்களைக் குழப்புகின்ற வகையில் அரசு செயற்படுமானால் எமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படும்.

வாகரைப் பகுதியில்தாக்குதல்கள் இடம் பெற்றுக் கொண்டு இருந்தபோதுதான் எமது தலைமைப்பீடம் கூடி, தற்போதைய நிலைப்பாட்டை நோர்வே அனுசரணையார்களுக்குத் தெரிவித்திருந்தது. எதிர்வரும் நாட்களுக்குள் நடக்கப் போகின்ற விடயங்கள் தான் பேச்சுக்கான திகதிகளையோ, நிகழ்ச்சி நிரல்களையோ தீர்மானிக்கக் கூடியனவாக இருக்கும்.

ஒரு வழிமுறையை அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கிறது. இனியும் கடைப்பிடிக்கும். புலிகள் தங்களைத் தாக்குகின்றார்கள். சீண்டுகிறார்கள் எனக் கூறிக்கொண்டு பாரியளவிலான படை நடவடிக்கைகளையும், மக்கள் மீதான படுகொலைகளையும் அரசு தீவிரப்படுத்துகின்றது. இதற்காக நாம் இன்றும் ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மோதல் நடக்கும் பகுதிக்குள் நேரடியாக நின்று யார் யுத்த நிறுத்தத்தை மீறுகிறார்கள், முதல் தாக்குதல்களை யார் தொடங்குகின்றார்கள் என்பதை நடுநிலைமையோடு அவதானித்து முடிவுகள் எடுக்க வேண்டும் என்பதே அக்கோரிக்கை.

ஸ்ரீலங்கா அரசு போலிச் சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டு, வன்முறைகளைத் தூண்டி படுகொலைகளை நிகழ்த்திக் கொண்டு இருக்கின்றது என்பதை சர்வதேச சமூகம் கண்டறிந்து கொள்ள வேண்டும். அதுதான் சர்வதேச சமூகத்திடம் நாம் வேண்டுவது.

அரசின் மீது தமிழ் மக்களுக்கு பலமான நம்பிக்கையீனம் இருக்கிறது. குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது பலமான சந்தேகம் இருக்கிறது. ஆனால் சர்வதேச சமூகத்திற்கும் நாங்கள் சில வழிகளைக் காட்ட வேண்டியுள்ளது.

ஒவ்வொரு ஸ்ரீலங்கா ஆட்சித் தலைவரும் பதவிக்கு வந்து தமிழ் மக்களை ஏமாற்றினர் என்பதை யும், போலியாகச் செயற்பட்டனர்என்பதையும் பகிரங்கப்படுத்த வேண்டிய தேவை எமக்கு இருந்தது. அதேபோன்று, மஹிந்த ராஜபக்ஷ அரசின் போலித்தனங்களை அறிந்துகொள்ள இதை யொரு கடைசிச் சந்தர்ப்பமாக சர்வ தேச சமூகம் கருதுமென நினைக்கிறோம்.

நோர்வேத் தூதுவர், நாம் அண்மையில் அனுப்பிய கடிதம் தொடர்பாகவும் எதிர்வரும் நாட்களில் அமைதி முயற்சிகளை முன்நகர்த்திச் செல்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவும் அண்மையில் ஸ்ரீலங்கா அரச தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதேபோன்று எம்முடனும் கருத்துகளைப் பரிமாற வேண்டும் என்று இங்கு வருகை தந்தார். கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம்.'' - என்றார்.

இதற்கிடையில் நேற்றிரவு பி.பி.ஸியின் தமிழோசைக்கு பேட்டியளித்த புலி களின் அரசியல்துறைப் பொறுப்பாளர்சு.ப.தமிழ்ச்செல்வன்:-

இணைத்தலைமை நாடுகள், சர்வதேச சமூகம் மற்றும் அனுசரணையாளர்கள் ஒரு கோரிக்கையை அண்மையில் முன்வைத்திருந்தனர். இரண்டு தரப்பும் மோதல்களை நிறுத்தி நிபந்தனையற்ற வகையில் நேரடியாகப் பேசவேண்டும் என்று ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தனர்.

இந்த வகையில் தான் எமது தலைமைப் பீடம் இதை, இந்த சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளை அவர்களுடைய ஆலோசனையை வரவேற்று அதற்கு மதிப்பளிக்கும் வகையில் நாம் அதற்கு இணக்கப்பாட்டைத் தெரிவித்திருக்கின்றோம்.

அதே நேரம், ஸ்ரீலங்கா அரசு எமது தேசத்தின் மீது பாரிய படை எடுப்புக்களையும் வன்முறைகளையும் அண்மைக் காலத்தில் தீவிரப்படுத்தியுள்ளது.

ஆகவே இது தொடரப்படுமாயின் எமது நிலைப்பாட்டினை மீள்பரிசீலனை செய்யவேண்டிவரும் என்பதனை நாங்கள் அன்றும் நோர்வே அனுசரனை யாளர்களுக்குக் கூறியிருக்கிறோம். இன்று கடித மூலம் நாங்கள் அனுசரணை யாளர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றோம். அதனையே நாங்கள் இன்றும் நோர் வேத் தூதருக்கு வலியுறுத்தியிருக்கின்றோம். (க)

CHEMISTRY
(GROUP CLASS)
REPEAT
THEORY PAPER
ஆரம்பம்: 14.10.2006
சனி, ஞாயிறு 8- 10 மணி
DIAS B.Sc(Hons)
COLLEGE OF CHEMISTRY
பழம் றோட், கந்தர்மடம்

CATWAS.COM
COMPUTER ACADEMY
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805
புதிய பிரிவுகள் ஆரம்பம்
DIPLOMA COURSES
Ms Office
DTP
Hard Ware
CERTIFICATE COURSES
Word XP/2003 Page Maker 7.0
Access XP/2003 Photo Shop 7.0
Excel XP/2003 Corel Draw 11.0
Power Point XP/2003 HTML
Kids Program
15.10.2006 க்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்

அதிர்ஷ்டம் இருக்கிறதா!!!
DV 2008 அமெரிக்க லொத்தர் விசாவுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒரு பாஸ்போட் அளவு புகைப்படத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.
திருமுருகன் கொம் நெற்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2227835

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org